**நகராட்சி நிர்வகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

அனுப்புநர்
திரு.ப. திருமால் செல்வம்,
ஆணையாளர்
நகராட்சி அலுவலகம்
மேல்விஷாரம் – 632509
இராணிப்பேட்டை மாவட்டம்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம்
50, சாரதி நகர்,
காகிதபட்டரை ,
வேலூர்.

ந.க.எண். 436/2020/சி1 நாள் : 24.07.2020

அய்யா,

பொருள்:- நிர்வாக அறிக்கை – மேல்விஷாரம் நகராட்சி 2019–2020 –ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை – சமர்ப்பித்தல் – தொடர்பாக.

பார்வை:- மேல்விஷாரம் நகராட்சி அலுவலக 2019–2020 நிர்வாக அறிக்கை.

=========

மேல்விஷாரம் நகராட்சியின் 2019–2020–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை 2 நகல்கள் இத்துடன் இணைத்து சமர்பிக்கப்படுகிறது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர் 24/7/2020
மேல்விஷாரம் நகராட்சி

24.7.2020 24.7.2020

இணைப்பு –
2019–2020 ம் ஆண்டு நிர்வாக அறிக்கை – 2 நகல்கள்

## மேல்விஷாரம் நகராட்சி

# நிர்வாக அறிக்கை 2019–2020

# மேல்விஷாரம் நகராட்சி

## 2019–2020 ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை

**நகராட்சியின் நிலை**

இந்நகராட்சி கடந்த 1951 – ம் ஆண்டில் முதல் நிலை பேரூராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது அதன் பிறகு 01.10.2004 –ல் மூன்றாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அரசானை எண்.9 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 05.01.2011-ல இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது.

**எல்லை**

இந்நகராட்சியின் மொத்த பரப்பு 8.69துர கீ.மீட்டர் ஆகும். மேல்விஷாரம் மற்றும் இராசத்துபுரம். ஆகிய வருவாய் பகுதிகள் உள்ளது.

**மக்கள் தொகை**

இந்நகராட்சி 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டுளள்து மக்கள் தொகை – 1991ஆம் ஆண்டில் – 26,346, 2001 ஆண்டில் – 36,757 ஆகவும் 2011–ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகரின் மக்கள் தொகை – 44786 ஆக உள்ளது. இதில் 22,655 ஆண்கள் மற்றும் 22,131 பெண்கள் ஆகும். இதில் படித்தவர்களின் மொத்த சதவீகிதம் 83,46% சதவீதம் ஆண்கள் 89,53% சதவீதம், பெண்கள் 77,39% சதவீதம், ஆக உள்ளது . இந்நகரின் 2019–ம் ஆண்டின் இடைக்கால மக்கள் தொகை 52,162 ஆகும். மேலும் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து கட்டிட வேலை மற்றும் காய்கறிகள் விற்பனை செய்ய சுமார் 300 முதல் 500 வரை இந்நகராட்சிக்கு தினசரி மக்கள் வந்து செல்கின்றனர்.

மக்கள் தொகை சதவிகிதம் :

முஸ்லிம் – 76.12 %
இந்து – 22,97 %
கிருஸ்துவர் – 0.77 %
மற்றவர் – 0.12 %

**குடிநீர் விநியோகம்**

இந்நகராட்சியில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் இந்நகரிலுள்ள குடியிருப்புகளுக்கேற்ப அவ்வப்போது திட்டம் விரிவுபடுத்தப்பட்டு தற்போது 2 நீர்தேக்கத்திலிருந்து நகருக்கு குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் 15 கிணறுகளில் இருந்தும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

இரண்டு நாட்களுக்கு ஒரு முறை இந்நகருக்கு 40.30 இலட்சம் காலன் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**மன்றக் கூட்டங்கள்**

அறிக்கை ஆண்டில் 9 சாதாரணக் கூட்டங்களும் 12 அவசர கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன. சிறப்புக் கூட்டம் எதுவும் நடைபெறவில்லை.

**நியமன குழு கூட்டங்கள்**

அறிக்கை ஆண்டில் இரண்டு நியமன குழு கூட்டம் நடைபெற்றுள்ளது. அறிக்கை ஆண்டில் கூட்டத்திற்கு ஆணையாளர் அவர்களே தனி அலுவலராக பொறுப்பு வகித்துள்ளனர்.

**ஆணையாளர்கள்.**

| | | |
|---|---|---|
| 1. | 1.4.2019 முதல் 31.05.2019 வரை | திரு.கே. கணேசன் ,ஆணையாளர் |
| 2 | 1.6.2019 முதல் 30.07.2019 வரை | திரு.எஸ் . பாபு பொறியாளர்(ம) ,ஆணையாளர் (பொ) |
| 3 | 31.7.2019 முதல் 31.10.2019 வரை | திரு. நித்தியானந்தம் ஆணையாளர் |
| 4 | 1.11.2019 முதல் 12.03.2020 வரை | திரு.எஸ் . பாபு பொறியாளர்(ம) ,ஆணையாளர் (பொ) |
| 2 | 13.3.2020 முதல் | திரு.ப. திருமால் செல்வம் ஆணையாளர் |

**அரசு கல்லூரிகள் மற்றும் தனியார் பள்ளிகள்**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கீழ்கண்டவாறு அரசு மற்றும் தனியார் கல்லூரிகள் மற்றும் பள்ளிகள் இயங்கி வருகின்றன.

1. பெறறியியல் கல்லூாரி தனியார் – 1
2. கலை கல்லூாரி தனியார் – 2
3. மேல் நிலைப்பள்ளி (நிதிஉதவி) – 2
4. அரசு உயர்நிலைப்பள்ளி (நிதிஉதவி) – 1
5. அரசு நடுநிலைப்பள்ளி ( நிதிஉதவி) – 2
6. அரசு ஆரம்பப்பள்ளி (நிதிஉதவி) – 2
7.

**நூலகங்கள்**

அறிக்கை ஆண்டில் அரசின் பராமரிப்பில் உள்ள ஒரு நூலகம் செயல்பட்டு வருகின்றது.

**விளையாட்டு மைதானம்**

இந்நகராட்சி பராமரிப்பில் விளையாட்டு மைதானங்கள் ஏதும் இல்லை.

தனியார் பராம்ரிப்பில் – 3 உள்ளது.

**வருவாய் தக்க வரியினங்கள்**

அறிக்கை ஆண்டில் வருவாய் ரூ.746.12 இலட்சம் வரவாக வந்துள்ளது. அதில் செலவினம் ஊதியம், இதரப்படிகள், தெருவிளக்கு குடிநீர் விநியோகம் மற்றும் இதர செலவினங்களுக்கு ரூ.891.18 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

**1.சொத்துவரி**

வருட வாடகை மதிப்பின் (Component Tax) கீழ் சொத்துவரியானது கீழ்க்கண்டவாறு பொது காரியங்களுக்காக பிரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. பொதுவரி(General Tax) | 7 % |
| 2. குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை வரி (Water charge and Drainage charges) | 3 % |
| 3. கல்வி வரி(Educational Tax) | 0 % |
| 4. நூலக வரி(Library Cess) | 1 % |
| **மொத்தம்** | **11 %** |

2019–2020 ம் ஆண்டில் சொத்துவரி தலைப்பின்கீழ் கேட்பாக ரூ.99,58 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டு அதில் ரூ.47.80 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. நிலுவையாக ரூ.51.78 இலட்சம் உள்ளதை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அறிக்கை ஆண்டில் மொத்த வரி விதிப்புகளின் எண்ணிக்கை ரூ.27849/– ஆகும்.

**காலியிட வரி**

அறிக்கை ஆண்டில் காலியிட வரி 01.10.2009 முதல் அரசு நிர்ணயித்த அடிப்படையில் மண்டலம் வாரியாக காலியிட வரி நிர்ணயம் செய்யப்பட்ட கீழ்கண்ட விகிதாச்சார அடிப்படையில் வசூலிக்கப்பட்டு வருகிறது.
இத்தலைப்பின் கீழ் ரூ,4.18 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | Zone A | 0.20 பைசா |
| 2 | Zone B | 0.15 பைசா |
| 3 | Zone C | 0.10 பைசா |

**வரியில்லா இனங்கள்**

அறிக்கை ஆண்டில் வரியில்லா இனங்களின் கீழ் கேட்பாக ரூ.1.92 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டு அதில் ரூ.1.92 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை ஆண்டில் வரியில்லா இனங்களின்கீழ் கீழ்கண்ட இனங்கள் உள்ளது.

தினசரி நாளக்காடி – 1
வணிக வளாகம் – 1
மீன்மகசூல் – 1
ஆடு தொட்டி – 1

**சேவை வரி (SUC Charges)**

அறிக்கை ஆண்டில் சொத்துவரியுடன் சேவை வரியாக ரூ.55.38 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டு அதில் ரூ.24.99 இலட்சம் வசூலிக்கப்பட்டு ரூ.30.39 இலட்சம் நிலுவையாக உள்ளதை வசூல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## தொழில்வரி

அறிக்கை ஆண்டில் கேட்பாக 49.93 இலட்சமாக நிர்ணையிக்கப்பட்டு ரூ.29.49 இலட்சம் வசூலிக்கப்பட்டு நிலுவையாக ரூ.20.43 , இலட்சமாக உள்ளது. நிலுவையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## குடிநீர் கட்டணம்

அறிக்கையாண்டில் 82 குடிநீர் இணைப்புகளும் வணிக பயன்பாட்டிற்காக 2 இணைப்புகளும் மொத்தம் 84 இணைப்புகள் வழங்கப்பட்டு தற்பொழுது 6390 இணைப்புகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. இவ்விணைப்புகளுக்கு வீட்டு உபயோகத்திற்காக ஆண்டு ஒன்றுக்கு ரூ.600/— ம் வணிக உபயோகாத்திற்காக ரூ.1200/—ம் தொழிற்சாலைகளுக்காக ரூ.2400/—ம் நிர்ணயிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது.

இந்த அறிக்கை ஆண்டில் குடிநீர் கட்டண கேட்பாக ரூ.38.58 இலட்சம் நிர்ணயம் செய்யப்பட்டு. ரூ.17.85 லட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது மீதிமுள்ள ரூ.20.73 லட்சம் நிலுவை தொகை வசூலித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## பொதுப்பிரிவு

அறிக்கை ஆண்டில் பொது பிரிவின் கீழ் கீழ்கண்ட அலுவலர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

அறிக்கை ஆண்டில் திரு. ஜனகராஜன், 01.04.2019 முதல் 01.12.2019 வரை (பொ) .திரு.மா.ரமேஷ் , 02.12.2019 முதல் 31.3.2020 வரை மேலாளராக பணிபுரிந்துள்ளனர்.

பொது பிரிவு

| | | |
|---|---|---|
| 1 | ஆணையாளர் | 1 |
| 2 | மேலாளர் | 1 |
| 3 | உதவியாளர் | 1 |
| 4 | இளநிலை உதவியாளர்கள் | 4 |
| 5 | வருவாய் உதவியாளர்கள் | 3 |
| 6 | பதிவறை எழுத்தர் | 1 |
| 7 | அலுவலக உதவியாளர்கள் | 1 |
| 8 | ஓட்டுநர் | 1 |
| 9 | வருவாய் ஆய்வாளர் | 1 |
| | மொத்தம் | 14 |

## பொதுசுகாதார பிரிவு

அறிக்கை ஆண்டில் கீழ்கண்ட துப்புரவு ஆய்வாளர்கள் பணிபுரிந்துள்ளனர்

1. திரு.வி.பாலசந்தர் 01.04.2019 முதல் 31.03.2020

| | | |
|---|---|---|
| 1 | சுகாதார ஆய்வாளர் | 1 |
| 2 | சுகாதார மேற்பார்வையாளர் | 2 |
| 3 | ஓட்டுநர்கள் | 1 |
| 4 | துப்புரவு பணியாளர்கள் | 25 |
| | **மொத்தம்** | **29** |

## மருத்துவமனைகள்

அறிக்கை ஆண்டில் ஒரு அரசு மருத்துவமனையும் ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும் உள்ளது. மேலும் 6 தனியார் மருத்துவமனைகள் செயல்பட்டு வருகிறது.

## பிறப்பு இறப்பு

அறிக்கை ஆண்டில் துப்புரவு ஆய்வாளரே பிறப்பு இறப்பு பதிவாளராக பணிபுரிந்து வருகிறார். அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளில் நிகழும் பிறப்பு இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகளை உடனுக்குடன் பதிவு செய்யப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. அதில் 922 பிறப்புகளும் 358 இறப்புகளும் பதிவு செய்யப்பட்டு இறந்து பிறந்த குழந்தைகள் பதிவு எதுவும் இல்லை.

## உணவு கலப்பட சட்டம்

உணவு தர பரிசோதனை பணியிடம் இந்நகராட்சியில் எதுவும் இல்லை. மேலும் நகராட்சி துப்புரவு ஆய்வாளரால் உணவு கலப்பட தடுப்பு சட்டத்தின் கீழ் தேனீர் கடைகள், சிற்றுண்டிகள், மளிகை கடைகள், வியாபாரங்கள் ஆகிய இனங்களுக்கு துப்புரவு ஆய்வாளரால் உரிமம் வழங்கப்பட்டு வருகிறது.

## அச்சம் மற்றும் அருவருக்கத் தக்க உரிமம்

1920–ம் ஆண்டு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 5–வது பிரிவிலுள்ள எல்லா வியாபாரங்களுக்கும் பிரசுரம் செய்யப்பட்டு அவைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் D & O உரிமங்களின் எண்ணிக்கை 881 ஆகும் இதில் ரூ.3.00 வசூலிக்கப்பட்டுள்ளது.

## மயானங்கள்

1. இந்துக்கள் மயானம் – 1
2. முஸ்லிம்கள் மயானம் – 2

## வாகனங்களின் விபரம்

1. திடக்கழிவு மினி லாரி – 1
2. டிராக்டர் – 2
3. ஈப்பு வாகனம் – 2
4. ஆட்டோ – 3

----

----

தினந்தோறும் நகராட்சி லாரி மற்றும் ஆட்டோகள் மூலமாக திடக்கழிவுகள் அன்றாடம் சேகரிக்கப்பட்டு உரகிடங்கிற்கு கொண்டு செல்லப்படுகிறது. உரகிடங்கு அமைந்துள்ள இடம் நகராட்சிக்கு சொந்தமானது.

நகராட்சி எல்லைக்குள் 13 சமுதாய கழிப்பிடங்கள் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரின் அனைத்து பகுதிகளிலும் நகராட்சி வாகனங்கள் மூலம் 18 மெட்ரிக் டன் திடக்கழிவுகள் உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு வருகிறது.

மருத்துவ கழிவுகள் அனைத்தும் இந்திய மருத்துவ கழகம் மூலமாக பாதுகாக்கப்பட்ட வண்டிகள் மூலம் மேல்விஷாரம் நகராட்சி உரக்கிடங்கிற்கு கொண்டு செல்லப்பட்டு உரிய முறையில் அழிக்கப்படுகிறது.

இந்நகராட்சியில் ஆடு, மற்றும் மாடு ஆகியவற்றிற்கு தனியாக உள்ள வதைகூடத்தின் மூலம் ஏலத்தின் அடிப்படையில் ஒப்படைப்பு செய்து பரமரிக்கப்பட்டு வருகிறது.

**புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டம் இந்நகராட்சியில் ஏதும் இல்லை.

**அம்மா உணவகம்**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.2 – சலீம் நகர் பகுதியில் அம்மா உணவகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மேற்படி அம்மா உணவகத்தை மகளிர் சுய உதவி குழுக்களால் பராமரிக்கப்பட்டு அக்குழுவிற்கு நகராட்சியின் மூலம் ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது.

**பொறியியல் பிரிவு**

அறிக்கை ஆண்டில் நகராட்சி பொறியாளர்கள்

1) திரு.சு. பாபு , நகராட்சி பொறியாளர், – 01.04.2019 முதல் 31.03.20 வரை

அறிக்கை ஆண்டில் கீழ்கண்ட பணியாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் | 1 |
| 2 | பொது பணி மேற்பார்வையாளர் | 1 |
| 3 | குழாய் பொருத்துனர் | 2 |
| 4 | குழாய் குடிநீர் உதவியாளர் | 2 |
| 5 | பணிஆய்வாளர் | 1 |
| 6 | மின்பணியாளர் | 2 |
| | **மொத்தம்** | 9 |

**சாலைகள்**

இந்நகராட்சி பகுதியில் 35.550 கிலோமீட்டர் நீளத்திற்கு சாலைகள் கீழ்கண்டவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

1) தார் சாலைகள் – 7.200 கிலோமீட்டர்
2) சிமெண்ட் சாலைகள் – 21.042 கிலோமீட்டர்
3) மண்சாலைகள் – 7.308 கிலோமீட்டர்

**நிதிகள்**

அறிக்கை ஆண்டில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு, மாவட்ட ஆட்சியர் அவர்கள் மூலமாக கீழ்கண்டவாறு நிதிகள் விடுவிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | நிதி விபரம் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை |
|---|---|---|---|
| 1 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி | சாலை மற்றும் கழிவுநீர் கால்வாய் அமைத்தல் | ரூ.29,40 இலட்சம் |
| 2 | தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டம் | சிமெண்ட் சாலை, மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் | ரூ.50.00 இலட்சம் |
| 3 | 14வது நிதி குழு | சிமெண்ட் சாலை | ரூ.132.00 இலட்சம் |

**தெரு விளக்குகள்**

இந்நகராட்சியில் 2 மின் பணியாளர்கள் மூலமாக கீழக்கண்ட விவரப்படி தெரு விளக்குகள் பாரமரிக்கப்பட்டு வருகிறது.

| **வ.எண்** | **விளக்குகளின் விவரங்கள்** | **எண்கள்** |
|---|---|---|
| 1 | குழல் விளக்குகள் | 577 |
| 1 | சோடியம் ஆவி விளக்குகள் | 126 |
| 2 | LED விளக்குகள் | 1563 |
| 3 | உயர் மின் கோபுர விளக்குகள் | 10 |
| | **மொத்தம்** | **2276** |

**பாதாள சாக்கடை திட்டம்**

இந்நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

நகரமைப்பு பிரிவு

அறிக்கையாண்டில் திரு. பிரசாந்ந் நகரமைப்பு ஆய்வாளராக 01.04.2019 முதல் 31.03.2020 வரை பணி புரிந்து வருகிறார். நகரமைப்பின் பிரதான பணிகள் கட்டிடம் கட்ட அனுமதி கோரும் விண்ணப்பங்களை பரிசீலித்தல், விளம்பர போர்டுகள் அமைக்க கோரும் விண்ணப்பங்களை பரிசீலத்ததின் மீது நடவடிக்கை எடுத்தல், கட்டிட வரம்பு நிர்ணயித்தல் அதனை அமுல்படுத்துதல் ஆக்கிரமிப்புகளை கண்காணித்தல் ஆட்சேபனையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுதல் நில ஆர்ஜித சட்டத்தின் மூலம் (கையகப்படுத்தல்) அரசு நிலங்களை பாராதீனம் பெறுதல் நகரமைப்பு திட்டம் தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேல்விஷாரம் நகராட்சியில் அங்கீகரிக்கப்பட்ட நகரமைப்பு திட்டங்கள் ஏதும் இல்லை.

கட்டிட அனுமதி அளிக்கப்பட்ட விவரம் (2019–2020)

| கட்டிட அனுமதி கோரி வந்தவை | அனுமதி அளிக்கப்பட்டவை | அனுமதி மறுக்கப்பட்டவை | திருப்பி அனுப்பப்பட்டவை | மேல் முறையீடு செய்தவை |
|---|---|---|---|---|
| 60 | 47 | 13 | – | – |

மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் உத்தரவின்படி அனுமதியற்ற விளம்பர பலகைகள் மற்றும் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகிறது.

**வழக்குகள்**

அறிக்கையாண்டில் வருவாய் பிரிவின் மூலம் 2017–2018 ம் ஆண்டிற்கு ஒரு வழக்கு உள்ளது (சி .அப்துல் அக்கிம் கல்லூரி)

**தணிக்கை**

2018–2019 ம் ஆண்டில் தணிக்கைத்துறையினரால் 63 எண்ணிக்கை தணிக்கை பத்திகளும் 9 எண்ணிக்கை தணிக்கை குறிப்புகளும் எடுக்கப்பட்டு மொத்தம் 72 பத்திகள் நிலுவையாக உள்ளது. மேலும் தணிக்கை அறிக்கையின்மீது உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை, வேலூர் அவர்களால் தணிக்கை முடிவு மிகவும் திருப்திகரமாக உள்ளது என சான்றளிக்கப்பட்டுள்ளது.

**பொது**

நடப்பு ஆண்டில் வார்டுகள் 1 முதல் 21 வரையிலான பகுதிகளுக்கு தட்டுப்பாடு இன்றி குடிநீர் சீராக விநியோகிக்கப்பட்டது. மேலும் நகரின் சுகாதார நிலைமை பொதுவாக திருப்திகரமாக இருந்தது.

நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், சென்னை, நகராட்சி மண்டல நிர்வாக இயக்குநர், வேலூர், மாவட்ட ஆட்சியர், இரணிப்பேட்டை ஆகியோர்கள் நிர்வாகம் சிறப்பான முறையில் செயல்படவும் திட்டங்களில் பணிகளை செய்வதற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்தும் அவ்வப்போது உரிய உத்தரவு மற்றும் அறிவுரை வழங்கியும் வந்தார்கள்.

நகராட்சி நிர்வாகத்தை செவ்வனே நடத்த ஆணையாளர் மற்றும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்களும் முழுமையான ஒத்துழைப்பினை நல்கியுள்ளதால் நகராட்சியின் நிர்வாகம் சிறப்பாக இருந்தது.

24/7/2020

ஆணையாளர்,
மேல்விஷாரம் நகராட்சி

24.7.2020
24/7/2020